# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## தேர்தல் செலவினத்தை ஒழுங்குபடுத்துதல்

**(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகாரசபைத் தேர்தல்கள் கட்டளைச்சட்டம்; 1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, மாகாணசபைத் தேர்தல்கள் சட்டம்; 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டம்; மற்றும் 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, சனாதிபதித் தேர்தல்கள் சட்டம் என்பவற்றின்கீழ் நடாத்தப்படும் ஒவ்வொரு தேர்தலிலும் வேட்பாளர்களினால் உறப்பட்ட செலவினத்தை ஒழுங்குபடுத்துவதற்கும்; அத்துடன் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டமூலம்**

---

*நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் அவர்களால் 2022, திசெம்பர் மாதம் 08 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

*(2022, நவெம்பர் மாதம் 29 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

[*163 ஆம் சட்டமூலம்* ]


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 25.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இச்சட்டமூலத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

*ச.வ.– ஓ. 30/2018*

***(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகாரசபைத் தேர்தல்கள் கட்டளைச்சட்டம்; 1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, மாகாணசபைத் தேர்தல்கள் சட்டம்; 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டம்; மற்றும் 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, சனாதிபதித் தேர்தல்கள் சட்டம் என்பவற்றின்கீழ் நடாத்தப்படும் ஒவ்வொரு தேர்தலிலும் வேட்பாளர்களினால் உறப்பட்ட செலவினத்தை ஒழுங்குபடுத்துவதற்கும்; அத்துடன் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடுசெய்வதற்குமானதொரு சட்டம்.***

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-*

*சுருக்கப் பெயர்*

***1.*** *இச்சட்டம், 2022 ஆம் ஆண்டின்      ஆம் இலக்க, தேர்தல் செலவினத்தை ஒழுங்குபடுத்துதல் சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.*

*இச்சட்டத்தின் ஏற்புடைமை*

***2.*** *இச்சட்டத்தின் ஏற்பாடுகள்-*

*(அ) (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகாரசபைத் தேர்தல்கள் கட்டளைச்சட்டம்;*

*(ஆ) 1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, மாகாணசபைத் தேர்தல்கள் சட்டம்;*

*(இ) 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டம்; அத்துடன்*

*(ஈ) 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, சனாதிபதித் தேர்தல்கள் சட்டம்,*

*என்பவற்றின்கீழ் நடாத்தப்பட்ட ஒவ்வொரு தேர்தலுக்கும் ஏற்புடையனவாதல் வேண்டும்.*

அதிகாரமளிக்கப்பட்ட தொகை

**3**. (1) இரண்டாம் பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் சட்டத்தின்கீழ் தேர்தலொன்றை நடாத்துவதனைத் தேவைப்படுத்துகின்ற பிரகடனத்தில் அல்லது கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட பெயர்நியமனக் காலப்பகுதி முடிவுற்றபின்னர், தேர்தல் ஆணைக்குழுவானது, அத்தகைய தேர்தலில் போட்டியிடுகின்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகள், சுயேச்சைக் குழுக்கள் மற்றும் வேறு வேட்பாளர்களின் கலந்தாலோசனையுடன், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம், அத்தகைய தேர்தலுக்காக இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க அதிகாரமளிக்கப்பட்ட தொகையைக் கணக்கிடும் நோக்கத்துக்காகப் பயன்படுத்தப்படுவதற்கானதும் இலங்கை ரூபாக்களிலானதுமான பணத்தொகையொன்றை நிர்ணயித்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட அதிகாரமளிக்கப்பட்ட தொகை பின்வருமாறு கணக்கிடப்படுதல் வேண்டும்:-

(அ) (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகாரசபைத் தேர்தல்கள் கட்டளைச்சட்டத்தின்கீழ் நடாத்தப்பட்ட தேர்தலொன்றின் விடயத்தில், தேர்தலானது எந்த உள்ளூர் அதிகாரசபைக்காக நடாத்தப்படுகின்றதோ அந்த உள்ளூர் அதிகாரசபையின் தேர்தல் இடப்பரப்பிலுள்ள பதிவுசெய்யப்பட்ட வாக்காளர்களின் மொத்த எண்ணிக்கையை (1) ஆம் உட்பிரிவின்கீழ் தேர்தல் ஆணைக்குழுவினால் அத்தேர்தலுக்காக நிர்ணயிக்கப்படக்கூடியவாறான இலங்கை ரூபாக்களின் அத்தகைய தொகையினால் பெருக்குவதிலிருந்து விளைகின்ற இலங்கை ரூபாக்களிலான தொகை;

(ஆ) 1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, மாகாணசபைத் தேர்தல்கள் சட்டத்தின்கீழ் நடாத்தப்பட்ட தேர்தலொன்றின் விடயத்தில், வேட்பாளரினால் போட்டியிடப்படும் நிருவாக மாவட்டத்திலுள்ள பதிவுசெய்யப்பட்ட வாக்காளர்களின் மொத்த எண்ணிக்கையை (1) ஆம் உட்பிரிவின்கீழ் தேர்தல் ஆணைக்குழுவினால் அத்தேர்தலுக்காக நிர்ணயிக்கப்படக்கூடியவாறான இலங்கை ரூபாக்களின் அத்தகைய தொகையினால் பெருக்குவதிலிருந்து விளைகின்ற இலங்கை ரூபாக்களிலான தொகை;

(இ) 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின்கீழ் நடாத்தப்பட்ட தேர்தலொன்றின் விடயத்தில், வேட்பாளரினால் போட்டியிடப்படும் எல்லாத் தேர்தல் மாவட்டங்களிலுமுள்ள பதிவுசெய்யப்பட்ட வாக்காளர்களின் மொத்த எண்ணிக்கையை (1) ஆம் உட்பிரிவின்கீழ் தேர்தல் ஆணைக்குழுவினால் அத்தேர்தலுக்காக நிர்ணயிக்கப்படக்கூடியவாறான இலங்கை ரூபாக்களின் அத்தகைய தொகையினால் பெருக்குவதிலிருந்து விளைகின்ற இலங்கை ரூபாக்களிலான தொகை;

(ஈ) 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின்கீழ் நடாத்தப்பட்ட தேர்தலொன்றின் விடயத்தில், தீவிலுள்ள தேர்தல் மாவட்டங்களில் பதிவுசெய்யப்பட்ட வாக்காளர்களின் மொத்த எண்ணிக்கையை (1) ஆம் உட்பிரிவின்கீழ் தேர்தல் ஆணைக்குழுவினால் அத்தேர்தலுக்காக நிர்ணயிக்கப்படக்கூடியவாறான இலங்கை ரூபாக்களின் அத்தகைய தொகையினால் பெருக்குவதிலிருந்து விளைகின்ற இலங்கை ரூபாக்களிலான தொகை.

(3) இரண்டாம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்கக் கணக்கிடப்பட்ட அதிகாரமளிக்கப்பட்ட தொகை வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

வேட்பாளரொருவரினாலான தேர்தல் செலவினத்தின் மீதான மட்டுப்பாடு

**4.** (1) இரண்டாம் பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் சட்டத்தின்கீழ் நடாத்தப்படும் தேர்தலொன்றிலான வேட்பாளரொருவர், அத்தகைய தேர்தல் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட தொகைக்கு விஞ்சுதலான செலவினத்தை உறுதலாகாது.

(2) அத்தகைய தேர்தல் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட தொகைக்கு விஞ்சுதலான செலவினத்தை வேட்பாளரொருவர் உறுமிடத்து, 2 ஆம் பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட எந்தச் சட்டத்தின்கீழ் அத்தகைய தேர்தல் நடாத்தப்பட்டதோ அந்தச் சட்டத்தின் கருத்துக்குட்பட அத்தகைய வேட்பாளர் சட்டமுரணானவொரு பழக்கம் என்ற தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன் அத்தகைய வேட்பாளரின் ஏதேனும்

அனுமதி அல்லது உட்கையின்றி அத்தகைய செலவினம் உறப்பட்டதென அத்தகைய வேட்பாளர் எண்பித்தாலொழிய, சட்டமுரணானவொரு பழக்கம் என்ற தவறு தொடர்பில் அத்தகைய சட்டத்தின்கீழ் விதிக்கப்பட்ட தண்டங்களுக்கு அவர் ஆளாதலும் வேண்டும்.

*குறித்தசில நன்கொடைகளை ஏற்றுக்கொள்ளல் மீதான தடை*

**5**. (1) இரண்டாம் பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் சட்டத்தின்கீழ் நடாத்தப்பட்ட தேர்தலொன்றிலான வேட்பாளரொருவர், ஒரு நன்கொடையை அல்லது உதவுதொகையை, அத்தகைய நன்கொடை அல்லது உதவுதொகை காசாகவிருப்பினுஞ்சரி அல்லது பொருளாகவிருப்பினுஞ்சரி-

(அ) ஓர் அரசாங்கத் திணைக்களத்திடமிருந்து, ஒரு பகிரங்கக் கூட்டுத்தாபனத்திடமிருந்து அல்லது 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் அல்லது கம்பெனிகள் தொடர்பான ஏதேனும் முன்னைய எழுத்திலான சட்டத்தின்கீழ் கூட்டிணைக்கப்பட்ட எந்தக் கம்பெனியில் அரசாங்கம் அல்லது ஒரு பகிரங்கக் கூட்டுத்தாபனம் எவையேனும் பங்குகளைச் சொந்தமாக வைத்திருக்கின்றதோ அந்த ஒரு கம்பெனியிடமிருந்து;

(ஆ) ஒரு வெளிநாட்டு அரசாங்கத்திடமிருந்து, ஒரு சர்வதேச ஒழுங்கமைப்பிடமிருந்து அல்லது இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட அல்லது பதிவுசெய்யப்பட்டவொரு கூட்டிணைக்கப்பட்ட குழுவிடமிருந்து;

(இ) 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் அல்லது கம்பெனிகள் தொடர்பான முன்னைய ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்டவொரு கம்பெனியிலுள்ள வெளிநாட்டுப் பங்குவைத்திருக்கை, நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல், ஐம்பது சதவீதமாக அல்லது அதற்குமேற்பட உள்ளவிடத்து அத்தகைய கம்பெனியிடமிருந்து; அல்லது

(ஈ) எந்த ஆளின் ஆளடையாளம் வெளிக்காட்டப் படவில்லையோ அந்த எவரேனுமாளிடமிருந்து,

அத்தகைய தேர்தலில் அத்தகைய வேட்பாளரின் தேர்தலை மேம்படுத்தும் அல்லது பெற்றுக்கொடுக்கும் நோக்கத்துக்காக ஏற்றுக்கொள்ளுதலோ அல்லது பெறுதலோ ஆகாது.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற வேட்பாளரொருவர் 2 ஆம் பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட எந்தச் சட்டத்தின்கீழ் அத்தகைய தேர்தல் நடாத்தப்பட்டதோ அந்தச் சட்டத்தின் கருத்துக்குட்பட சட்டமுரணானவொரு பழக்கம் என்ற தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன் சட்டமுரணானவொரு பழக்கம் என்ற தவறு தொடர்பில் அத்தகைய சட்டங்களின்கீழ் விதிக்கப்பட்ட தண்டங்களுக்கு அவர் ஆளாதலும் வேண்டும்.

பெறப்பட்ட உதவு தொகைகளும் உறப்பட்ட செலவினமும் பற்றிய விபரத்திரட்டை வேட்பாளர் சமர்ப்பித்தல் வேண்டும்

**6**. (1) இரண்டாம் பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் சட்டத்தின்கீழ் நடாத்தப்பட்ட தேர்தலொன்றிலான ஒவ்வொரு வேட்பாளரும், அத்தகைய தேர்தலின் முடிவு வெளியிடப்பட்ட தேதியிலிருந்து இருபத்தொரு நாட்களினுள் (3) ஆம் உட்பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட முறையான அதிகாரிக்கும் அதிகாரசபைக்கும் அத்தகைய வேட்பாளரின் தேர்தலை மேம்படுத்துவதற்காக அல்லது பெற்றுக்கொடுப்பதற்காக-

(அ) அத்தகைய வேட்பாளரினால் அல்லது அத்தகைய வேட்பாளரின் சார்பில் ஏற்றுக்கொள்ளப்பட்ட அல்லது பெறப்பட்ட எல்லா நன்கொடைகளும் அல்லது உதவுதொகைகளும்பற்றிய விபரத்திரட்டொன்றை; அத்துடன்

(ஆ) அத்தகைய வேட்பாளரினால் அல்லது அத்தகைய வேட்பாளரின் சார்பில் உறப்பட்ட எல்லாச் செலவுகளும்பற்றிய விபரத்திரட்டொன்றை,

சமர்ப்பித்தல் வேண்டும்.

(2) இப்பிரிவின் நோக்கங்களுக்காக "அத்தகைய தேர்தலின் முடிவு வெளியிடப்பட்ட தேதி" என்பது,-

(அ) (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகாரசபைத் தேர்தல்கள் கட்டளைச்சட்டத்தின்கீழ் நடாத்தப்பட்டவொரு தேர்தலின் விடயத்தில் அக்கட்டளைச்சட்டத்தின் 66 ஆம் பிரிவின்கீழ்;

(ஆ) 1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, மாகாணசபைத் தேர்தல்கள் சட்டத்தின்கீழ் நடாத்தப்பட்டவொரு தேர்தலின் விடயத்தில் அச்சட்டத்தின் 60 ஆம் பிரிவின்கீழ்;

(இ) 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின்கீழ் நடாத்தப்பட்டவொரு தேர்தலின் விடயத்தில் அச்சட்டத்தின் 62 ஆம் பிரிவின்கீழ்; அத்துடன்

(ஈ) 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின்கீழ் நடாத்தப்பட்டவொரு தேர்தலின் விடயத்தில் அச்சட்டத்தின் 64 (2) ஆம் பிரிவின்கீழ்,

முடிவுகள் வெளியிடப்பட்ட தேதி என்று பொருளாகும்.

(3) ஓராம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட விபரத்திரட்டுக்கள்-

(அ) (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகாரசபைத் தேர்தல்கள் கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் நடாத்தப்பட்டவொரு தேர்தலின் விடயத்தில், தேர்தல் ஆணைக்குழுவுக்கான பிரதியொன்றுடன் முறையான உள்ளூர் அதிகாரசபை இடப்பரப்பின் தெரிவத்தாட்சி அலுவலருக்கு;

(ஆ) 1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, மாகாணசபைத் தேர்தல்கள் சட்டத்தின்கீழ் நடாத்தப்பட்டவொரு தேர்தலின் விடயத்தில், தேர்தல் ஆணைக் குழுவுக்கான பிரதியொன்றுடன் முறையான நிருவாக மாவட்டத்தின் தெரிவத்தாட்சி அலுவலருக்கு;

(இ) 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின்கீழ் நடாத்தப்பட்டவொரு தேர்தலின் விடயத்தில், தேர்தல் ஆணைக் குழுவுக்கான பிரதியொன்றுடன் முறையான தேர்தல் மாவட்டத்தின் தெரிவத்தாட்சி அலுவலருக்கு; அல்லது

(ஈ) 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின்கீழ் நடாத்தப்பட்டவொரு தேர்தலின் விடயத்தில், தேர்தல் ஆணைக்குழுவுக்கு,

வேட்பாளரினால் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(4) ஓராம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியிற் குறிப்பீடுசெய்யப்பட்ட விபரத்திரட்டு-

(அ) அத்தகைய வேட்பாளரினால் அல்லது அவரது சார்பில் ஏற்றுக்கொள்ளப்பட்ட அல்லது பெறப்பட்ட ஒவ்வொரு நன்கொடையினதும் அல்லது உதவுதொகையினதும் தொகையையும், அந்நன்கொடை அல்லது உதவுதொகை பொருளாகவிருப்பின், அந்நன்கொடையின் அல்லது உதவுதொகையின் மதிப்பிடப்பட்ட பெறுமதியையும்;

(ஆ) அத்தகைய நன்கொடை அல்லது உதவுதொகையானது, கொடை, கடன் முற்பணம் அல்லது வைப்பு என்றவகையாக இருந்ததாவென்பதையும்; அத்துடன்

(இ) அத்தகைய நன்கொடையை அல்லது உதவுதொகையை அளிக்கின்ற தனியாளின் அல்லது கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத ஆட்கள் குழுவின், விடயத்துக்கேற்ப, பெயரையும், முகவரியையும், தேசிய அடையாள அட்டை இலக்கத்தையும் அல்லது பதிவிலக்கத்தையும்,

குறிப்பிடுதல் வேண்டும்.

(5) ஓராம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியிற் குறிப்பீடுசெய்யப்பட்ட விபரத்திரட்டு, பின்வருவனவற்றுக்காக செலுத்தப்பட்டதாயினுஞ்சரி அல்லது செலுத்தப்படாததாயினுஞ்சரி, வேட்பாளரினால் அல்லது அவரது சார்பில் உறப்பட்ட செலவினத்தை, அதனை உறுதிப்படுத்துகின்ற சிட்டைகளுடனும் பற்றுச்சீட்டுக்களுடனும் சேர்த்து உள்ளடக்குதல் வேண்டுமென்பதுடன், மேற்படி சேவைகள் கொடுப்பனவின்றிப் பெற்றுக்கொள்ளப்பட்டிருப்பின், அத்தகைய சேவைகள் எவ்வாட்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டனவோ

அவ்வாட்களின் பெயர்களும் முகவரிகளும் உள்ளடக்கப்படுதலும் வேண்டும்:-

(அ) அத்தகைய தேர்தல் தொடர்பான விளம்பரங்களை, துண்டுப்பிரசுரங்களை, கொடிகளை, வரைதல்களை, நிழற்படங்களை, ஒட்டுவிளம்பரங்களை அல்லது சுவரொட்டிகளை, அச்சிடுதலும், வெளியிடுதலும், ஒட்டுதலும், காட்சிக்குவைத்தலும் அல்லது வெளிக்காட்டிவைத்தலும்;

(ஆ) அத்தகைய தேர்தல் தொடர்பான விளம்பரங்களை தயாரித்தலும் வானொலியில் அல்லது தொலைக் காட்சியில் ஒலிபரப்புதலும்;

(இ) அத்தகைய தேர்தல் தொடர்பான விளம்பரங்களைத் தயாரித்தலும் செய்தித்தாள்களிலும், சஞ்சிகைகளிலும் அல்லது வேறு வெளியீடுகளிலும் வெளியிடுதலும்;

(ஈ) அத்தகைய தேர்தல் தொடர்பான கூட்டங்களை நடாத்துவதற்காக எவையேனும் வளவுகளை அல்லது சாதனங்களை வாடகைக்கெடுத்தல் அல்லது பயன்படுத்துதல்;

(உ) வேட்பாளரை இடம்பெயர்ப்பதற்காக வாகனங்களை வாடகைக்கெடுத்தலுக்கான செலவினம்தவிர அத்தகைய தேர்தல் தொடர்பான செயற்பாடுகளுக்காக வாகனங்களை வாடகைக்கெடுத்தல்; அத்துடன்

(ஊ) அவ்வாகனங்களைச் செலுத்துவதற்கான எரிபொருளை வழங்குதல்:

ஆயின், எவ்வாறாயினும், பின்வருவனவற்றுக்காக வேட்பாளரினால் அல்லது அவரது சார்பில் உறப்பட்ட செலவினம், (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியிற் குறிப்பீடுசெய்யப்பட்ட விபரத்திரட்டில் உள்ளடக்கப்படுதலாகாது:-

(அ) தேர்தலானது எந்த இடப்பரப்புக்காக நடாத்தப்படுகின்றதோ அந்த இடப்பரப்பினுள் வேட்பாளரை இடம்பெயர்த்தல்; அத்துடன்

(ஆ) எழுதுகருவிவகை, தொலைபேசி அல்லது வேறு தொடர்பாடல் வழிவகைகள்.

(6) ஓராம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட விபரத்திரட்டுக்கள் வேட்பாளரினால் கையொப்பமிடப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய விபரத்திரட்டுக்களிலுள்ள தகவல்கள், வேட்பாளரின் அறிவுக்கெட்டியவரை உண்மையானவையும் சரியானவையும் என்ற பொருள்பட வேட்பாளரினால் கையொப்பமிடப்பட்டு, சமாதான நீதிவானொருவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட வெளிப் படுத்துகையொன்றுடன் சேர்த்தனுப்பப்படுதலும் வேண்டும்.

விபரத் திரட்டுக்களும் வெளிப் படுத்துகை களையும் பெறப்பட்டமை தொடர்பான அறிவித்தலை வெளியிடுதல்

**7**. (1) ஆறாம் பிரிவின்கீழ் வேட்பாளர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட விபரத்திரட்டுக்களையும் வெளிப்படுத்துகைகளையும் பெற்றதன்மீது-

(அ) (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகாரசபைத் தேர்தல்கள் கட்டளைச்சட்டம், 1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, மாகாணசபைத் தேர்தல்கள் சட்டம் அல்லது 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டம் என்பவற்றின்கீழ் நடாத்தப்பட்ட தேர்தலொன்றின் விடயத்தில், முறையான தெரிவத்தாட்சி அலுவலர்; அத்துடன்

(ஆ) 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின்கீழ் நடாத்தப்பட்ட தேர்தலொன்றின் விடயத்தில், தேர்தல் ஆணைக்குழு,

விடயத்துக்கேற்ப, தெரிவத்தாட்சி அலுவலர் அல்லது தேர்தல் ஆணைக்குழு ஓர் அறிவித்தலில் பெயர்குறிப்பிடப்பட்ட வேட்பாளர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட விபரத்திரட்டுக்களையும் வெளிப்படுத்துகைகளையும் பெற்றுள்ளார் அல்லது பெற்றுள்ளது எனக் குறிப்பிட்டும் மற்றும் அத்தகைய விபரத்திரட்டுக்களும் வெளிப்படுத்துகைகளும் எவ்விடத்திலும் எந்நேரங்களிலும் எவரேனுமாளினால் பார்வையிடப்படலாம் என்பதைச் சுட்டிக்காட்டியும் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளிலான ஆகக்குறைந்தது ஒரு செய்தித்தாளிலேனும் அந்த அறிவித்தலை வெளியிடச்செய்தல் வேண்டும்.

(2) தெரிவத்தாட்சி அலுவலரும் தேர்தல் ஆணைக்குழுவும், (1) ஆம் உட்பிரிவின் கீழ் வெளியிடப்பட்ட அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட இடத்திலும் நேரத்திலும் வேட்பாளரொருவரினால் தயாரிக்கப்பட்ட விபரத்திரட்டுக்களையும் செய்யப்பட்ட வெளிப்படுத்துகையையும் பார்வையிடுவதற்கு ஆளொருவரை அனுமதித்தல் வேண்டுமென்பதுடன் தேர்தல் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தொகையினதான வொரு கட்டணக் கொடுப்பனவின் மீது அத்தகைய விபரத்திரட்டுக்களின் அல்லது வெளிப்படுத்துகையின் பிரதிகளை எடுப்பதற்கு அத்தகைய ஆளை அனுமதித்தலும் வேண்டும்.

(3) தெரிவத்தாட்சி அலுவலரும் தேர்தல் ஆணைக்குழுவும், 6 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் பெறப்பட்ட எல்லா விபரத்திரட்டுக்களையும் வெளிப்படுத்துகைகளையும் அத்தகைய பெறுகையின் பின்னர் ஆறுமாத காலப்பகுதியொன்றுக்குப் பேணிக்காத்தல் வேண்டுமென்பதுடன் அக்காலப்பகுதியின் முடிவில் அத்தகைய விபரத்திரட்டுக்களையும் வெளிப்படுத்துகை களையும் அழித்துவிடலாம்.

சட்டமுரணான பழக்கம் என்ற தவறு

**8.** (அ) 6 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்கியொழுகுவதற்கு நியாயமான காரணமின்றித் தவறுகின்றவர்; அல்லது

(ஆ) பொய்யானதென வேட்பாளர் ஒருவர் அறிந்துள்ள, அல்லது நியாயமானமுறையில் அறிந்திருக்கவேண்டிய கூற்றொன்றாகவுள்ளதும், 6 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் சமர்ப்பிக்கப்பட்ட அத்தகைய ஏதேனும் விபரத்திரட்டில் அல்லது 6 ஆம் பிரிவின் (6) ஆம் உட்பிரிவில் செய்யப்பட்ட வெளிப்படுத்துகை யொன்றிலானதுமான ஏதேனும் கூற்றை அளிக்கின்ற வர்,

2 ஆம் பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் சட்டத்தின்கீழ் நடாத்தப்பட்ட தேர்தலொன்றிலுள்ளவருமான அத்தகைய ஒவ்வொரு வேட்பாளரும் அத்தகைய தேர்தல் 2 ஆம் பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட எந்தச் சட்டத்தின்கீழ் நடாத்தப்பட்டதோ அந்தச் சட்டத்தின் கருத்துக்குட்பட ஒரு சட்டமுரணான பழக்கம் என்ற தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன் ஒரு சட்டமுரணான

பழக்கத்தைப் புரிந்தமைக்காக அத்தகைய சட்டத்தினால் குறித்துரைக்கப்பட்ட தண்டங்களுக்கு அவர் ஆளாதலும் வேண்டும்.

பொருள்கோடல்

**9**. இச்சட்டத்தில், சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய–

"ஒரு வேட்பாளரின் சார்பில் ஏற்றுக்கொள்ளப்பட்ட அல்லது பெறப்பட்ட நன்கொடை அல்லது உதவுதொகை" என்பது, அத்தகைய வேட்பாளரின் வெளிப்படையான அல்லது உட்கிடையான சம்மதத்துடன் ஏற்றுக்கொள்ளப்பட்ட அல்லது பெறப்பட்ட அத்தகைய நன்கொடை அல்லது உதவுதொகை என்று பொருளாகும்;

"தேர்தல் மாவட்டம்" என்பது, அரசியலமைப்பின் 97 ஆம் உறுப்புரையின் கீழானதும் அப்போதைக்கு வலுவிலுள்ளதுமானவொரு பிரகடனத்திற் குறித்துரைக்கப்பட்ட ஒரு தேர்தல் மாவட்டம் என்று பொருளாகும்;

"உள்ளூர் அதிகாரசபை" என்பது, ஒரு மாநகரசபை, நகரசபை அல்லது பிரதேசசபை என்று பொருளாகும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலேங்கி நிற்றல்

**10**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.